# மாநிலங்களவைத் தலைவர் மீது 'நம்பிக்கையில்லாத் தீர்மானம்' ஏன்?

## புதுடெல்லியில் – மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா பேட்டி – விளக்கம்!

புதுடெல்லி, டிச. 16 -

**புதுடெல்லியில், நேற்று முன்தினம், ஊடகங்களுக்குப் பேட்டியளித்த, நாடாளுமன்ற கழகக் குழுவின் தலைவர் திருச்சி சிவா, "மாநிலங்களவைத் தலைவர் மீது 'நம்பிக்கையில்லாத் தீர்மானம்' கொண்டு வரப்படுவது ஏன்?" என்பதற்கு விரிவான விளக்கமளித்தார்.'**

திருச்சி சிவா எம்.பி.யின் பேட்டி வருமாறு:-

**கேள்வி:** *மாநிலங்களவைத் தலைவர் ஜெகதீப் தன்கரை அவமதித்து விட்டதாக ஒரு குற்றச்சாட்டு என்பது ஆளுங்கட்சி வைத்திருக்கிறார்கள். குறிப்பாக, ஒரு விவசாயியின் மகன் என்று மிகப்பெரிய குற்றச்சாட்டு வைக்கிறார்கள். அவர்மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று ஒரு விமர்சனம் வைக்கிறார்கள். அதை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?*

**பதில்:** அதாவது, நம்பிக்கை இல்லாத் தீர்மானம் யார்மீது கொண்டுவரப்பட்டது என்றால், விவசாயியின் மகன்மீது அல்ல, மாநிலங்களவைத் தலைவர் – துணை குடியரசுத் தலைவர். அவர் விவசாயியின் மகன் என்றுதான் சொல்கிறார். நானே விவசாயிதான். நான் ஊருக்குச் சென்று, நேராக என்னுடைய விவசாய நிலங்களுக்குச் சென்று, நான்அதை பராமரிக்கச் செல்வேன். இதையெல்லாம் ஒரு காரணமாக அவர்கள் காட்டக் கூடாது.

### 'சன்சத்' தொலைக்காட்சி பாரபட்சமாகச் செயல்படுகிறது!

நடைஎன்ன என்பதை நாட்டு மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். காரணம், நாடாளுமன்றத்தில் என்ன நடப்பது என்பதை தெரிந்து கொள்வதற்கு உதவிகரமாக இருக்கிற ஒரே ஒரு சாதனம் 'சன்சத்' தொலைக்காட்சி. அது நாடாளுமன்றத்திற்குச் சொந்தமானது. அதில் எதுவும் முறையாக – முழுமையாக காட்டப்படுவதே இல்லை. நான் இதை பலமுறை குறிப்பிட்டிருக்கி றேன்.

ஆளுங்கட்சியின் தரப்பு பற்றி மட்டும்தான் காட்டப்படும். நாங்கள் இங்கு எவ்வளவு அமளியில் ஈடுபட்டாலும், அந்த வார்த்தையை நான் பயன்படுத்தக் கூடாது. அமளி என்று சொன்னால், எங்கள் உணர்ச்சியின் உச்சக்கட்டத்திற்குசெல்கின்ற போது, ஒருவேளை நாங்கள் செய்வது தவறு என்றால், மக்கள் தீர்ப்பளிப்பார்கள். ஆனால், ஒட்டுமொத்தமாக இந்த பக்கத்தைஇருட்டடிப்பு செய்துவிட்டு, அவர்கள் எங்களைப் பற்றி அவதூறாக பேசுவதை மட்டும் அவைக் குறிப்பில் ஏற்றுவார்கள். பின்னர், ஒளிபரப்பு செய்வார்கள்.

நாடாளுமன்றத்தில் தீவிரவாத தாக்குதல் நடந்த நாள் இது. உயிரிழந்தவர்களுக்கு நாங்கள் சென்று அஞ்சலி செலுத்தினோம். ஒரு வேதனையான நிலை. நாடாளுமன்றத்தின் பாதுகாப்பை, அதிலிருந்து தலைவர்களை எல்லாம் பாதுகாக்க, அந்தப் பாதுகாப்பு படையினரை இப்போது ஒட்டுமொத்தமாக அகற்றிவிட்டு, கொஞ்சம்கூட அவர்கள்மீது கருணை இல்லாமல், அதற்குப் பதிலாக மத்திய தொழில் பாதுகாப்பு படையை கொண்டு வந்து நிறுத்தி யிருக்கிறார்கள்.

இவர்களுக்கும் நாடாளுமன்றத்துக்கும் எந்த அனுபவமும் இல்லை. எந்தவிதமான அறிமுகமும் கிடையாது. ஆனால், அவர்களுக்கு எல்லா முனைகளும் தெரியும். எல்லா விதமான ஆயுதங்களிலும் பயிற்சி பெற்றவர்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களை எப்படி மதிக்க வேண்டும் என்றெல்லாம் தெரியும். இதுபோன்று அனைத்தையும் தன்னிச்சையாகவே அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். யாரையும் கேட்பதில்லை. இப்போது பிரச்சினை அது அல்ல. இதுவும் ஒரு பிரச்சினை. இது தனியாக. இது பற்றி நாங்கள் எழுப்பி இருக்கிறோம்.

இன்றைக்கு காலையில் நான் எழுந்து ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்பினேன். உங்களுக்கு வாய்ப்பு தருகிறேன் என்று சொல்லிவிட்டு, ஆளுங்கட்சியைச் சார்ந்த ஒருவரை அழைத்தார். அவர் ஒரு பிரிவை எடுத்து, ஒரு விதியைக் காட்டி பேச ஆரம்பித்தார். பேச ஆரம்பித்து, பிரச்சினையோடு அவர் நிற்கவில்லை. மாறாக, அவருக்கு வாய்க்கு வந்ததையெல்லாம் பேசிக் கொண்டிருந்தார். காங்கிரஸ் கட்சியை தாறுமாறாக பேசினார். எதிர்க்கட்சிகளை பேசினார். சற்றேறக்குறைய ஒரு பெரிய பொதுக்கூட்டத்தில் பேசுவதுபோல பேசுகிறார். அவைத் தலைவர் அதைக் கேட்டுக் கொண்டே இருக்கிறார். இது நடைமுறையிலேயே இல்லை.



நாங்கள் எல்லாம் "பாயிண்ட் ஆஃப் ஆர்டர்" என்று சொன்னால், "வாட் இஸ் தி ரூல்" என்று கேட்பார். பிறகு, "ஸ்ட்ரிக்ட் யுவர் பாயிண்ட்" என்று சொல்வார். தேவையில்லாமல் பேசக் கூடாது என்று சொல்கிறவர், சற்றேறக்குறைய 15 நிமிடம் அவரை பேச அனுமதித்தார். அதற்கு பின்னர், நாங்கள் எதிர்க்கட்சித் தலைவர் உட்பட எங்களுக்கு அனுமதி தாருங்கள் என்றபோது, தொடர்ந்து ஒவ்வொருவராக அங்கே இருப்பவர்களை எல்லாம் பெயர் சொல்லி அழைத்து, யாராவது எதிர்பாராமல் கையை உயர்த்தினால்கூட, அவர்கள் பெயர் சொல்லி அழைத்து, அவர்கள் என்னவெல்லாம் பேசக்கூடாதோ அவ்வளவும் பேசினார்கள்.

பின்னர், எதிர்க்கட்சித் தலைவர் பேச எழுந்த போது ஒரு நிமிடம்கூட ஆகவில்லை. அவைத் தலைவர் அவரைக் குறுக்கிடுகிறார். இவ்வளவு நேரம் நடந்தது. சற்றேறக் குறைய 40 நிமிடங்கள் ஆளுங்கட்சி யினர், எதிர்க்கட்சியினரை அவதூறாக பேசுவதை உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருக்கின்ற ஒரு ... அது எந்தவிதமான விவாத நேரமும் அல்ல. அது பூஜ்ஜிய நேரமும் அல்ல. மாறாக, ஒழுங்குப் பிரச்சினை என்று ஒருவர்தான் எழும்பினார். மற்றஅனைவரையும் ஒன்றுமே இல்லாமல் பேச அனுமதித்தார்.

"... the rules and procedures of the Parliament". இது போன்று எல்லாம் நான் பார்த்ததே இல்லை. அவைத் தலைவர் என்பவர் எப்படி நடந்து கொள்வார்? எப்படி உறுப்பினர்களை நடத்துவார் என்பதை 25-ஆம் ஆண்டு காலமாக நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஆனால், அவ்வளவு மாறாக, அவர்களை பேச அனுமதித்து, அவர்கள் பேச நினைப்பதெல்லாம் பேச வைத்துவிட்டு, அதை ரசிக்க வைத்தார்.

### எதிர்க்கட்சித் தலைவர் பேசுவதை தொலைக்காட்சி காட்டவேயில்லை!

அடுத்து, எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது அவரை தொலைக்காட்சி காட்டவே இல்லை. எப்போதும் இரண்டு பேரையும் காட்டுவார்கள். அவைத் தலைவரை மட்டுமே காட்டுகிறார்கள். அவர் ஏதோ அவரை கும்பிட்டு பார்த்துக் கொண்டே இருக்கிறார். பார்ப்பவர்கள் என்ன சொல்வார்கள்? இவ்வளவு பெரிய பொறுப்பில் இருக்கிறவர் வணங்கி கேட்கிறார். அவர்கள்தான் அவரை மதிக்க மாட்டேன் என்கிறார்கள் என்றுதான் சொல்வார்கள்.

அடுத்து, அதற்கு மீறி காட்டினால், அங்கு எதிரே செயலகத்தின் அதிகாரிகள் இருக்கும் டேபிளை காட்டுகிறார்கள். இல்லையென்றால், ஆளுங்கட்சியை காட்டுகிறார்கள். எனவே, சன்சத் தொலைக்காட்சி என்பதை யாரும் நம்பாதீர்கள். அதில் வரப்படும் அனைத்தும் பாரபட்சமானது, ஒரு தலைப்பட்சமானது.

கடைசியாக என்னை பேசச் சொல்லி நான் கேட்டுக் கொண்டிருந்தபோது, எனக்கு வாய்ப்பு கேட்டு எங்களுடைய கட்சியைச் சார்ந்த தோழர்கள் அத்தனை பேரும் முறையிட்டார்கள். எங்கள் குழுத் தலைவரைப் பேசச் சொல்லுங்கள் என்று. காங்கிரஸ் கட்சி, திரிணாமுல் அனைவரும் முறையிட்டார்கள். பின்னர், என்னை அனுமதித்தார். நான் நேரடியாக வந்தேன். அவர்களைப்போல இந்த இடத்தில் நான் பெரிய லெக்ட்ச்சர் எடுக்க வரவில்லை.

விதியின்படி பேசுகிறேன். இரண்டு விதிகள் -238,238 A. 238 (2)யார் மீதும் இன்னொரு உறுப்பினர் தவறான வார்த்தைகளை பயன்படுத்தக் கூடாது. முதல் நாள் ரேணுகா சௌத்ரி என்ற உறுப்பினரின் நோட்டீசை அதே 238 (5)விதியைக் காட்டி அவர் தள்ளுபடி செய்கிறார். இன்றைக்கு நான் சொன்னது 238 A என்ன சொல்கிறது என்று சொன்னால், "No Member should raise an allegation against a Member or a Member of theHouse". மாநிலங்களவையில், மக்களவையில் இருக்கிற உறுப்பினர்களைப் பற்றி அவதூறாக எதுவும் பேசக்கூடாது என்று இருக்கிற விதி. நீங்கள் விதிகளைக் காப்பாற்ற வேண்டியவர். அவையின் மாண்பை உயர்த்திப் பிடிக்க வேண்டியவர். உறுப்பினர்களை பாதுகாக்க வேண்டியவர். பாரபட்சமில்லாமல்நடந்து கொள்ள வேண்டியவர்.

நான் நேற்றைக்கு கூடச் சொன்னேன். பழைய நாடாளுமன்ற கட்டடத்தில் அவைத் தலைவரின் நாற்காலிக்கு பின்னால் தராசு இருக்கும். இரு தரப்பும் சமமாக இருப்பதை போல. இப்போது அதையும் எடுத்து விட்டார்கள். எனவே, அந்த அதிகாரிகள்கூட இல்லை.

இவ்வாறு எங்களுடைய குரலை கேட்க மறுப்பதும், அவர்களைப் பேச அனுமதிப்பதும், அதை மட்டும் அவை குறிப்பில் ஏற்றுவதுமாக இருக்கிறது. அவர்கள் நேற்றைக்கு, நேரடியாக பெயர் சொல்லி ராகுல் காந்தியை பேசினார்கள். சோனியா காந்தியை பேசினார்கள். மல்லிகார்ஜுன கார்கேவை தாறுமாறாக பேசினார்கள். இதெல்லாம் அவைக் குறிப்பில் இருக்கக் கூடாது. விதிகளின்படி சொல்லக்கூடாது என்றால், நீங்கள் அவற்றை அவைப் குறிப்பில் இருந்து நீக்க வேண்டும். இதை தயவு செய்து நீங்கள் கடைப்பிடியுங்கள்.

ஏற்கனவே, நான் எழுப்பிய பாயிண்ட் ஆஃப் ஆர்டரை நீங்கள் இன்னும் ரூலிங்கொடுக்காமல் வைத்திருக்கிறீர்கள். இதற்கும் நீங்கள் சொல்ல வேண்டும் என்று சொன்னபோது, பதில் சொல்ல முடிய வில்லை. அப்படியே நிறுத்தி விட்டார். ஒன்றும் சொல்லவில்லை. தலையை மட்டும் ஆட்டிக் கொண்டார். ஆனால், அது பதிவாகி இருக்கிறது. என்னுடைய முகம் தொலைக்காட்சியில் காட்டப்பட்டதோ, இல்லையோ, குரல் பதிவாகி இருக்கிறது. காரணம் ஒலிப் பெருக்கி எனக்கு கொடுக்கப்பட்டது.

ஆளுங்கட்சியினரின் பெரிய சலசலப்பு, இதுவரை காணாத அளவிற்கு ஆளுங்கட்சியினர் அமளியில் ஈடுபடுகிறார்கள். எப்போதும் எதிர்க்கட்சியில்தான் பிரச்சினை வரும். அவர்கள்தான் குரல் எழுப்புவார்கள். ஆனால், ஆளுங்கட்சியினர் முன்னுக்கு வந்து அவர்கள் அத்தனை பேரும் குரல் எழுப்புகிறார்கள். அவர்களை விட்டுவிட்டு எதிர்க்கட்சியினர் பெயரை மட்டும், அவர் பக்கத்தில் இருக்கும் காவலர் குறிக்கிறார். எனவே, இவ்வளவு பாரபட்சமாக இதுவரை யாருமே பார்த்ததில்லை.

### மாண்புகள் மதிக்கப்படாமல் தூக்கியெறியப்படுகிறது!

இந்தியா என்பது உலகின் தலைசிறந்த ஜனநாயக நாடு. அதில் பாராளுமன்றம் என்பது, 'ஜனநாயகத்தின் ஆலயம்' என்று சொல்வார்கள். ஆனால், அங்கே இப்படி மாண்புகள் மதிக்கப்படாமல் தூக்கி எறியப்படுகிறது. விதிகள் பின்பற்றப்படு வதில்லை. ஆளுங்கட்சி என்ன எல்லாம் பேச நினைக்கிறார்களோ, அதையெல்லாம் பேச அனுமதித்து, இதெல்லாம் அவை குறிப்பில் இருக்கிறது. இது சரித்திர ஏடு. எதிர்காலத்தில் இன்னும் 50 ஆண்டுகள் கழித்து யாரும் புரட்டி னாலும்கூட இது தான் இருக்கும். எனவே, இதையெல்லாம் பதிவு செய்து, அவைத் தலைவர், நீங்கள் எல்லாம் நடந்து கொள்வது சரியா? நீங்கள் எல்லாம் இவ்வாறுசெய்யலாமா? என்று கேட்பது மக்களுக்கு புரியும். அதுவும் பதிவாகும். எனவே, நாங்கள் ஏதோ தவறாக நடப்பதுபோல, அவர் எங்களிடம் முறையிடு வதைப்போல, இப்படி எல்லாம் நாடகங்கள் நடக்கிறது.

கதறிக் கதறி தொண்டைத் தண்ணீர் வீணாகிப் போனது என்பதைவிட நாங்கள் எங்களுடைய பொறுமையை பாதுகாத்தோம். இவ்வளவு அவமானங்கள் - இவ்வளவு அவதூறுகள் - இந்த அளவிற்கு இல்லை என்ற அளவிற்கு இழிவாக நடத்தப்படுவது அரசியல் கட்சிகளை சரித்திரத்திலேயே இல்லாதது. இந்திய நாடு எந்த நிலையில் இருக்கிறது? ஜனநாயக என்ன நிலையில் இருக்கிறது? நான் மக்களிடம் முறை யிடுகிறேன். தனிப்பட்ட திருச்சி சிவா, தி.மு.க., காங்கிரஸ், எங்களோடு இருக்கும் மற்ற கட்சிகள் என்பது அல்ல. எதிர்க்கட்சியினர் அல்லது ஏதோ ஒரு அரசியல் கட்சி நாடாளுமன்றத்தில் அனைவருக்கும் சரிசமமான மரியாதை தரப்பட வேண்டிய இடத்தில் இவ்வாறு நடக்கிறது.

### ஜனநாயகத்தின் நெறிமுறைகளை காப்பாற்றாததுதான் இதற்குக் காரணம்!

ஜனநாயக நாட்டில் எவ்வளவு காலம் ஒரு கட்சி ஆளுங்கட்சியாக இருந்துவிட முடியும். எவ்வளவு பெரிய கட்சியும் அடுத்து காணாமல் போயிருக்கிறது. தேர்தலில் தோற்றுப் போயிருக்கிறது. சக்கரம் சுழல்வதைப்போல மாறி மாறி வரக்கூடிய இடத்தில் ஏதோ இவர்கள்தான் காருள்ள அளவும், கடல் நீருள்ள அளவும் ஆட்சியில் இருப்பார்கள் என்பதைப்போல அவர் செய்வது, அவர்களை பாதுகாக்கின்ற வகையில் அவைத் தலைவர் நடந்து கொள்வது, அவர்மீது கொடுத்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பற்றி அவர்கள் பேசுகிறார்கள். அப்படி பேசவே கூடாது. அது இன்னும் விவாதத்திற்கே எடுத்துக் கொள்ளப்படவில்லை. அப்படியே பேசினாலும், அவர் நாற்காலியில் இருக்கக் கூடாது. அவரைப் பற்றி பேசுகிறபோது, அவர் இருக்கக் கூடாது. எனவே, அந்தத் தீர்மானத்தைப் பற்றி அவர்கள் பேசுகிறார்கள். எதிர்க்கட்சியினர் விமர்சித்து... இவர் கேட்டுக் கொண்டிருக்கிறார். அது எதுவுமே முறையானது அல்ல. எதுவுமே சரியானது அல்ல. நாங்கள் கதறி கதறி பார்த்தோம். ஒத்தி வைத்திருக்கிறார்.

உச்சக் கட்டத்திற்குச் சென்று எதிர்க்கட்சித் தலைவர் முறையிட்டு விட்டார். எங்களை நீங்கள் மதிப்பதில்லை. இதுபோன்று நம்பிக்கையில்லாத்தீர்மானம் கொண்டு வருவதைத் தவிர, வேறு என்ன வழி இருக்கிறது என்றுதான் கேட்டார். நாங்கள் திருப்பித் திருப்பி அதைத்தான் சொல்கிறோம். போராடிப் பார்த்தோம்; முறையிட்டுப் பார்த்தோம்; மன்றாடினோம்; தனிப்பட்ட முறையில் சந்தித்து பேசினோம்; ஆனால் எதுவுமே நடக்காத நிலையில் தொடர்ந்து எங்களை அவமதிக்கிற, புறக்கணிக்கிற காரணத்தினால் ஜனநாயகத்தின் நெறிமுறை களை காப்பாற்றாத காரணத்தினால் அவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறோம். விவாதத்திற்கு வரட்டும். பேசுவோம். நடப்பது நடக்கட்டும். யார் பக்கம் தீர்ப்பு வந்தாலும் சரி, சொல்ல வேண்டியதைச் சொல்லலாம். அதற்காக காத்திருக்கிறோம். ஆனால், கொடுத்தது தவறு என்று யாரும் சொல்லக்கூடாது. அனைவருக்கும் அந்த உரிமை இருக்கிறது. ஒருவர்மீது நம்பிக்கை இருக்கிறது, இல்லை என்று சொல்லுகிற உரிமை அனைவருக்கும் இருக்கிறது. பொறுத்துப் பொறுத்துப் பார்த்துதான், இத்தனை கட்சிகளும் சேர்ந்து கொடுத்திருக்கிறோம்.

ஆனால், இன்றைக்கு நடந்தது இவ்வளவு காலத்தில் நாங்கள் காணாத - சரித்திரத்தில் நடக்காத ஒரு நிகழ்ச்சி இன்றைக்கு நாடாளுமன்ற மாநிலங்களவையில், The Upper House, The Elders House- இவ்வளவு உயர்வாகப் பேசப்படுகின்ற அந்த அவையில், அவையின் தலைவர் மூலமாக ஆளுங்கட்சியினர் என்னவெல்லாம் கட்டவிழ்த்து விட முடியுமோ அவ்வளவும் விட்டார்கள். அதை அவர் ரசித்துக் கொண்டிருந்தார். எங்களை பேச அனுமதிக்காமல், கதற வைத்த அந்த கொடுமை நாங்கள் யாரிடம் சென்று முறையிடுவது. மக்களிடம் உங்கள் மூலம்.

**கேள்வி:** *"ஒரே நாடு - ஒரே தேர்தல்"-க்கு அமைச்சரவை ஒப்புதல் கொடுத்திருக்கிறார்கள். அதை எப்படி பார்க்கிறீர்கள்? அது எந்தளவிற்கு சாத்தியமானது?*

**பதில்:** மிகவும் உணர்ச்சிவசப்பட்டு இருக்கிறேன். இருந்தாலும் இதுவும் ஒரு முக்கியமான கேள்வி. நீங்கள் அந்தக் கேள்வியோடு நிறுத்தி இருந்தால் பரவாயில்லை.

திராவிட முன்னேற்றக் கழகம் கடுமையாக எதிர்க்கிறது. எங்கள் தலைவர் முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்திருக்கிறார். அந்த அறிக்கையை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இது வரப்போகிறது என்று தெரிந்த நாளிலிருந்தே நாங்கள் எதிர்த்துக் கொண்டிருக்கிறோம். பல காரணங்கள் உண்டு.

சுருக்கமாக அல்லது யாராவது என்ன காரணங்கள் என்று கேட்டால், ஒருவேளை மக்களவை, இன்றைக்கு இருக்கும் இந்த ஆட்சி, இது தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி. இது பி.ஜே.பி.யின் அரசு அல்ல. ஏனென்றால், பி.ஜே.பி.க்கு பெரும்பான்மை கிடையாது. இன்னும் சொல்ல வேண்டுமானால், நன்றாக குறித்துக் கொள்ளுங்கள். எந்த பெரும்பான்மை பெற்ற கட்சியும், தங்களுடையக் கட்சிக்கென்று ஒரு தலைவரை தேர்ந்தெடுத்து, அவரைத்தான் நிறுத்த வேண்டும். பிரதமர் இவர்தான் வர வேண்டும் என்றுஅவரைத் தேர்ந்தெடுத்தது, தேசிய ஜனநாயகக் கூட்டணி மைய மண்டபத்தில் கூடிஎடுத்த முடிவு. எனவே, அதில் இருக்கும் யாராவது இவரிடம் வருத்தம் வந்து ஒருவேளை விலகினால், பெரும்பான்மை இழந்தால், "ஒரே நாடு - ஒரே தேர்தல்" என்றால், என்ன நடக்கும்?

இது ஒன்றும் புதிதல்ல. நான் கற்பனை செய்து பேசுவதல்ல. 1977,1989,1996,1998 - இந்த ஆட்சிக் காலங்களில் எல்லாம் ஒன்றரைஆண்டு, இரண்டு ஆண்டு இப்படித்தான் இருந்திருக்கிறது. ஒன்று ஒன்பது மாதம். இப்படி எல்லாம் இருந்திருக்கிறது. இது நடக்கக்கூடும்.

நான் இப்போது கேட்பது, "ஒரே நாடு – ஒரே தேர்தல்" என்று வந்து, மாநிலங்களுக்கும், நாடாளுமன்றத்திற்கும் நடந்து முடிந்தவுடன், மக்களவை கலைந்து போகுமேயானால், அனைத்து சட்டமன்றங்களையும்கலைத்துவிட்டு அத்தோடு சேர்த்து நடத்துவார்களா?

### 'ஒரே நாடு ஒரே தேர்தல்' சாத்தியமில்லாத ஒன்று!

இரண்டாவது, அரசியல் சட்டத்தின் 356-வது பிரிவு. மாநில அரசுகளை குடியரசுத் தலைவர் கலைப்பதற்கான அதிகாரம். அதுஇப்போது அதிகமாக பயன்படுத்தப்படுவதில்லை என்றாலும், அது இன்னும் அரசியல் சட்டத்தில் இருக்கிறது. எனவே, ஒருவேளை ஒரு மாநில அரசு கலைக்கப்படுகிறது அல்லது இதுபோல பெரும்பான்மை இழந்து கவிழ்ந்து போகிறது அல்லது இவர்களேகவிழ்க்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது, நாடாளுமன்றத்தையும் கலைத்துவிட்டு அத்தோடு சேர்த்து நடத்துவார்களா? என்ன விசித்திரம்...

ஒரே நேரத்தில் நடத்துவது என்பது சாத்தியமல்ல. ஏதாவது ஒரு மாநிலம் ஆட்சி கலைந்தாலும் சரி, அதனுடைய ஆட்சி பெரும்பான்மை இழந்தாலும் சரி, இங்கிருக்கும் மக்களவை கலைந்தாலும் சரி, அப்போது என்ன செய்வார்கள்? பதில் சொல்ல வேண்டும்.

எனவே, இதுபோன்று பல பிரச்சினைகள் இருக்கின்றன. பல காரணங்கள் இருக்கின்றன. அந்தக் காரணத்தினால் நாங்கள் இதை ஏற்கவில்லை.

இவ்வாறு திருச்சி சிவா எம்.பி. பேட்டியளித்தார்.

---

அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி - டி.ஆர்.பி.ராஜா சிறப்புரை!

## தஞ்சை மண்டல தொழில்நுட்ப அணி மண்டல அளவிலான நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர்கள் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. - கா.அண்ணாதுரை பங்கேற்பு!

*தஞ்சாவூர், டிச. 16 -*

தேர்தல் பணியை துவங்கி விட்டோம் நாடாளுமன்ற தேர்தலில் 40க்கு 40 என்ற முழக்கத்தை எவ்வாறு மக்களிடம் கொண்டு சேர்த்தோமோ, அதை விட உறுதியாக சட்டமன்றத் தேர்தலில் பணியாற்றி 2026 ல் மீண்டும் முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்களை ஆட்சி கட்டிலில் அமர வைப்போம்.. திமுக தொழில்நுட்ப அணியில் லட்சக்கணக்கான இளைஞர்களை சேர்த்து மேலும் வலுப்படுத்துவோம் என தஞ்சையில் நடைபெற்ற தஞ்சை மண்டல திமுக தகவல் தொழில்நுட்ப அணியின் ஆலோசனை கூட்டத்தில் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா உறுதியுடன் தெரிவித்தார்.

தஞ்சை, திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, கடலூர் மாவட்டங்களை உள்ளடக்கிய, தஞ்சை மண்டல தி.மு.க தகவல் தொழில்நுட்ப அணியின் ஆய்வுக் கூட்டம் மற்றும் ஆலோசனைக் கூட்டம் தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க செயலாளர் துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில்கழகஉயர்நிலைசெயல்திட்டக் குழுஉறுப்பினர்எஸ்.எஸ். பழநிமாணிக்கம், டி.கே.ஜி.நீலமேகம்எம்.எல்.ஏ, தஞ்சைமாநகரச்செயலாளர்சண்.இராமநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தகவல்தொழில்நுட்ப அணியின்தஞ்சைமண்டல பொறுப்பாளர்பி.எம். ஸ்ரீதர்வர வேற்புரையாற்றினார்.

அதனைதொடர்ந்து அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, டி.ஆர்.பி.ராஜா பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி. எல்லோருக்கும் எல்லாம் என்பதுதான் திராவிட ஆட்சியின் நோக்கம், சென்னையில் சமீபத்தில் எதிர்கொண்ட மழை வெள்ளத்திற்கு முதலமைச்சரும், துணை முதலமைச்சரும் கடுமையாக உழைத்து ஆற்றிய பணிகளை அனைவரும் அறிவார்கள், துணை முதலமைச்சராக பொறுப்பேற்ற உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது நிர்வாக திறமையின் காரணமாக பல ஆண்டுகளாக பட்டா கிடைக்காமல் இருந்த 2 லட்சத்திற்கு மேற்பட்டவர்களுக்கு பட்டாக்களை வழங்கி நிர்வாகத்திறமையை வெளிப்படுத்தியுள்ளார். அவர் நலத்திட்டங்கள் கொடுப்பது போல் செல்ஃபி எடுத்துக் கொண்டு செல்லும் நடிகர் அல்ல என்பதனை திமுக தொழில்நுட்ப அணியினர் இன்னும் தீவிரமாக மக்களிடம் எடுத்துக் கொண்டு செல்ல வேண்டும் என்று வலியுறுத்தினார்..

இந்நிகழ்ச்சியில் பல்வேறு ஆலோசனை வழங்கி பேசிய திமுக தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் தொழில்துறை அமைச்சர் டிஆர்பி ராஜா பின்னர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில்,

2026 சட்டமன்றத் தேர்தலில் திமுக கூட்டணியை வெற்றி பெற வைத்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை இரண்டாவது முறையாக ஆட்சி கட்டிலில் அமர வைத்து பல்வேறு நலத்திட்டங்கள் தொடர்வதற்கு உழைப்போம். நாடாளுமன்ற தேர்தலில் 40க்கு 40 என எவ்வாறு மக்களிடம் உறுதியாக எடுத்துச் சென்றோமோ அதே போல 234 தொகுதிகளும் தி.மு.க கூட்டணி வெற்றி பெற மேலும் லட்சக்கணக்கான இளைஞர்களை தகவல் தொழில்நுட்ப அணியில் இணைத்து வலுப்படுத்துவோம் என்றார்.

இக்கூட்டத்தில் தஞ்சை தெற்குமாவட்டசெயலாளர்கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ, நாகை மாவட்ட செயலாளர் என். கௌதமன், சட்டமன்ற உறுப்பினர் உறுப்பினர்கள் அசோக்குமார், துணை மேயர் அஞ்சுகம்பூபதி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உஷா புண்ணிய மூர்த்தி தகவல்தொழில்நுட்பஅணியின் மாநில நிர்வாகிகள் கோவி.லெலின், , நவீன் எஸ்.சுரேஷ், விஜய கதிரவன், பாசபிரபு, மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ராஜா. சீனிவாசன், முத்து கதிர்வேலன் எ.ஜாபர் அலி, எ.பாரிபாலன், டி.ஆனந்தன், பி.அரவிந்த், டி.கற்பகமூர்த்தி, கே.விக்னேஷ் உள்ளிட்ட ஐ.டிவிங் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

---

புதுக்கோட்டை பொன்னமராவதி பேரூர் தி.மு.க. சார்பில்

## மாபெரும் பொதுக்கூட்டம்! நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா!

### அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை! அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் - ஆரணி மாலா சிறப்புரை!

*புதுக்கோட்டை, டிச 16 -*

கழக இளைஞரணி செயலாளர், தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பொன்னமராவதியில் மாபெரும் பொதுக் கூட்டம் நலயத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (16.12.2024 - திங்கள்கிழமை) மாலை 5.00 மணியளவில் பட்ட மரத்தான்கோவில் அருகில், பொன்னமராவதி யில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர், சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி தலைமையில் நடைபெறுகிறது. பொன்னமராவதி பேரூர் கழக செயலாளர் அ.அழகப்பன், பொன்னமராவதி தெற்கு ஒன்றிய செயலாளர் அ.அடைக்கல மணி ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

அ.முத்து, எஸ்.ஜெயராமன், பொன்.ராமலிங்கம், அழகு. சிதம்பரம், வி.ஆர். இளையராஜா, இரா.கணேசன், சுதா அடைக்கலமணி, தனலெட்சுமி அழகப்பன்,

சுந்தரி அழகப்பன், ஆலவயல் ராமு, பெரி.அழகப்பன், கா.வெங்கடேஷ் மு.பாண்டியன்,

அழ.பழனிச்சாமி, ஆர். விஜயா, தி.சுப்பையா, சி. மணி, ஆ.சிக்கந்தர், பாலசுப்பிரமணியன், அ.தட்சணாமூர்த்தி ஆர்.காளிதாஸ், ஆர்.விகாஸ் , எம். முத்துக்குமார், பி.கே.எஸ். செல்வகுமார் தி.ராஜா, மீனாட்சி மணிகண்டன், சுந்தரி இராமையா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே. செல்லபாண்டியன், தலைமை கழக பேச்சாளர்கள் ஆரணி மாலா, பார்கவி, மாறன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

அறந்தாங்கி ராஜன், அண்ணாமலை ரகுபதி, எம்.எம்.அப்துல்லா எம்.பி, கவிச்சுடர் கவிதைபித்தன்,

பெரியண்ணன் அரசு பரணி கார்த்திகேயன், த. சந்திரசேகரன், த.மணிராஜன், சு.சண்முகம் அ.சுப்பிரமணியன், ஞான.இளங்கோவன், க.அடைக்கலம், அ.ஸ்ரீதேவி அண்ணாத்துரை, ஜெ.அபுதாஹீர், ஆர்.ஆர்.கே.கலைமணி, இரா.ஆனந்த், க.ராஜேந்திரன், அ.செந்தில்குமார், மேகலாமுத்து, சீனி.பழனியப்பன் என்.வீரையா , ஆர்.வி.செல்வம், கே.எம். சுப்பிரமணியன் சு.கலைவாணி, தேவி, பாத்திமா பீவி, அ.சின்னையா, க.ச.த.தென்னரசு, மணி அண்ணாத்துரை, ம.மணி, அ.ராமச்சந்திரன், சி.விஜயகுமார், ஆ.ராமன்,

அ.கருப்பையா, ஆலவயல் சண்முகம், சோம. தேனிமலை, ப.விஜயன், கை.நாகராஜன், சோலை செல்வம், அ.அடைக்கலம், தேலூர் சுப.சின்னையா, அ.சோமையா , ஆலவயல்

முரளிசுப்பையா, டி.எம்.கே.சுப்பிரமணியன், எம்.கணேசன், அஞ்சை காத்தான், ஆர். அப்பாஸ், அ.சுரேஷ்குமார், சோம.நாகராஜன், த.பாலசண்முகம், ப.குமார், ஆர். எம்.எஸ்.சேதுராமன், எஸ். முத்தையா, ஆலவயல் சாமிநாதன், உ.ராமலிங்கம், துர்கா தாஸ். ஆர். மணிகண்டன், ஆர்.சக்திவேல், ஏ.விஸ்வநாதன், உ.ரமேஷ், பெரி. முருகேசன், மோகன்ராஜ், எம்.ராகுல், எம்.சி.மணி, நகரப் பட்டி கண்ணன், எம்.சரவணன் க.கதிரேசன், ஆ.முகமதுஆரிப் ஆர். விஜய லெட்சுமி ஆ.காந்திமதி, க.பொன்னழகு, ச. காவேரி, த.வள்ளி, பி. வாசுகி, ம.கலா, ச.சுமதி, பழ. சுந்தராக, வி.மச்சக்காளை, ஏ.அப்துல்லத்தீப், எஸ்.பி. நாகராஜன், ஏ.ஆர். லோகநாதன், பழ.இளையராஜா, சின்னத்தம்பி. ரா. மேகநாதன், டி.சுதர்சன், கே.ஆர்.ராமசாமி,

மு.சுப்பிரமணியன், சே.மீனாட்சி சுந்தரம் உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளை கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். முடிவில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பழ. இளையராஜா நன்றி கூறுகிறார்.